**ஜூலை – 21**

# TNPSC துளிகள்

- குழந்தைகள் உரிமைகளின் பாதுகாப்பிற்கான தேசிய ஆணையம் (NCPCR - National Commission for Protection of child Rights) கட்டணக் கட்டுப்பாடுகளை வடிவமைத்துள்ளது. அரசு உதவி பெறாத தனியார் பள்ளிகள் அடிக்கடி மற்றும் தன்னிச்சையாக குழந்தைகளின் கல்விக் கட்டணத்தை உயர்த்துகின்றன. இவற்றைத் தடுத்து ஒரே சீரான கட்டணக் கொள்கையை நடைமுறைப்படுத்த கட்டுப்பாடுகளை இது வடிவமைத்துள்ளது.
    - குழந்தைகள் உரிமைகளின் பாதுகாப்பிற்கான தேசிய ஆணையம் என்பது நாட்டில் குழந்தை உரிமைகளுக்கான உச்ச அமைப்பாகும். இந்த அமைப்பு வடிவமைத்துள்ள கட்டுப்பாடுகளை மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்திற்கு பரிந்துரைக்கும்.
- ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை தெற்கு சூடான் மீது ஆயுதத் தடைக்கான தீர்மானத்தை [2428 (2018)] நிறைவேற்றியுள்ளது. அழிவுகரமான உள்நாட்டுப் போர் இந்தப் புதிய நாட்டில் தொடங்கி 5 ஆண்டுகள் கழித்து இந்தத் தடை அமலுக்கு வருகிறது.
    - இத்தீர்மானத்தை அமெரிக்கா வடிவமைத்தது. 6 நாடுகளின் வெளிநடப்புகளுக்கு எதிராக வெற்றி பெறுவதற்குத் தேவையான குறைந்தபட்ச 9 நாடுகளின் வாக்குகளைப் பெற்று இத்தீர்மானம் வெற்றி பெற்றுள்ளது.
- முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராம் சாகல், ஆர்எஸ்எஸ் சிந்தனையாளர் ராகேஷ் சின்ஹா, பாரம்பரிய நடனக் கலைஞர் சோனல் மான்சிங் மற்றும் சிற்பம் செதுக்குபவரான ரகுநாத் மோகபத்ரா ஆகிய நான்கு பேரையும் ராஜ்ய சபை உறுப்பினர்களாக குடியரசுத் தலைவர் நியமித்துள்ளார். அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 80 (1) (a) கீழ் அமைச்சரவைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இவர்களை குடியரசுத் தலைவர் நியமித்துள்ளார்.
    - இந்த நால்வரின் நியமனங்களுக்கு முன்பு, ராஜ்ய சபையில் 8 நியமன உறுப்பினர்கள் உள்ளனர்.
- நியமனங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு தொழில்நுட்ப கல்விக்கான அனைத்து இந்திய மன்றத்தின் (AICTE - All India Council for Technical Education) தலைவரான பேராசிரியர் அனில் டி சகஸ்ராபுதியின் நியமனத்தை புதுப்பித்து ஒப்புதல் அளித்துள்ளது. அவர் 65 வயது அடையும் வரை இப்பதவியில் தொடர்வார்.
    - இவர் தொழில்நுட்ப கல்விக்கான அனைத்து இந்திய மன்றத்தின் தலைவராக ஜூலை 2015-ல் பொறுப்பேற்றார்.
- ஐரோப்பிய யூனியன் மற்றும் ஜப்பான் ஆகிய இரண்டும் பொருளாதார கூட்டாண்மை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. டோக்கியோவில் நடைபெற்ற ஐரோப்பிய யூனியன் - ஜப்பான் உச்சி மாநாட்டின் போது, ஐரோப்பிய யூனியன் தலைவர்களான ஜீன் கிளாட் ஜங்கர் மற்றும் டோனால்டு டஸ்க் மற்றும் ஜப்பானியப் பிரதம அமைச்சர் சின்சோ அபே-க்கு இடையே இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.
    - இது ஐரோப்பிய யூனியனின் மிகப்பெரிய வர்த்தக ஒப்பந்தம் ஆகும். இது தடையற்ற வர்த்தக மண்டலத்தை ஏற்படுத்தி உலகின் மொத்த உள்நாட்டு

உற்பத்தியில் மூன்றாவது இடத்தில் இருக்கும்.

- ❖ பொது இடங்களைப் பெண்களுக்கு பாதுகாப்பான இடங்களாக அமைக்கும் பொருட்டு, கொல்கத்தா காவல் துறையானது 'தி வின்னர்ஸ்' என்ற சிறப்பு அனைத்து மகளிர் ரோந்துக் குழுவை அமைத்துள்ளது.
- ❖ ஐக்கிய நாடுகளின் உலக உணவு திட்டத்தின் நல்லிணக்கத் தூதுவராக கிராமி விருது பெற்ற வெற்றியாளர் இத்தாலி பாடகர் லாரா பசுணி நியமிக்கப்பட்டுள்ளார்.
- ❖ முன்னாள் தூதராக பதவி வகித்த டாக்டர் டிசிஏ ராகவன் உலக விவகாரங்கள் இந்திய ஆணையத்தின் இயக்குநர் ஜெனரலாக நியமிக்கப்பட்டுள்ளார் (ICWA - Indian Council of World Affairs). இவர் இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் எம்.வெங்கய்ய நாயுடு தலைமையிலான ICWA-ன் நிர்வாக அமைப்பு மற்றும் நிர்வாக ஆணையத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
  - இயக்குநர் ஜெனரல் என்னும் பதவி இந்திய அரசின் செயலாளர் தகுதிக்கு இணையானதாகும்.

# தேசியச் செய்திகள்

## பன்சாகர் கால்வாய்த் திட்டம்

- ❖ உத்திரப் பிரதேசத்தில் உள்ள மிர்ஷாப்பூர் மாவட்டத்தில் 171 கிலோமீட்டர் நீளமுள்ள பன்சாகர் கால்வாய்த் திட்டத்தினை பிரதமர் தொடங்கி வைத்துள்ளார்.
- ❖ பன்சாகர் அணைக்கட்டு திட்டம், மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் மற்றும் பீகார் அரசுகளின் கூட்டு முயற்சியாகும்.
- ❖ மத்தியப்பிரதேசத்தில் உள்ள கங்கை ஆற்றுப்படுகையில் அமைந்துள்ள சோன் ஆற்றின் மேல் கட்டப்படும் இது ஒரு பல்நோக்கு ஆற்றுப்பள்ளத்தாக்கு திட்டம் ஆகும்.
- ❖ இந்த கால்வாய் அமைப்பு மத்தியப் பிரதேசத்தின் சதோல் மாவட்டத்திலிருந்து அத்வா தடுப்பு அணை, மேஷா அணைக்கட்டு மற்றும் ஜிர்கோ நீர்த்தேக்கம் ஆகியவற்றிற்கு நீரினைக் கொண்டு செல்லும்.

# சர்வதேசச் செய்திகள்

## பாதுகாப்பான, ஒழுங்கான மற்றும் முறையான இடப்பெயர்விற்கான உலக உடன்படிக்கை

- ❖ சர்வதேச இடப்பெயர்வினை சிறப்பாக நிர்வகிப்பதற்கான பாதுகாப்பான, ஒழுங்கான மற்றும் முறையான இடப்பெயர்விற்கான உலக உடன்படிக்கையினை ஐக்கிய நாடுகள் முதன் முதலாக இறுதிபடுத்தியுள்ளது.
- ❖ சர்வதேச இடப்பெயர்வு, இடப்பெயர்விற்கான உரிமையை வலுப்படுத்துதல், நிலையான மேம்பாட்டிற்கான பங்களிப்பு ஆகியவற்றில் உள்ள சவால்களை குறிப்பிட்டுக் காட்டுவதே இந்த உடன்படிக்கையின் நோக்கமாகும்.
- ❖ முழுமையான மற்றும் விரிவான முறையிலான சர்வதேச இடப்பெயர்வின் பரந்த அளவிலான பரிமாணங்களை ஒன்று சேர்ப்பதற்கான அரசுகளுக்கு இடையேயான முதல் ஒப்பந்தம் இதுவாகும்.
- ❖ அமெரிக்காவைத் தவிர ஐக்கிய நாடுகளின் அனைத்து உறுப்பினர்களும் இந்த

உடன்படிக்கையினை ஒப்புக்கொண்டுள்ளனர். இது சட்டப்பூர்வமாக யாரையும் கட்டுப்படுத்தாத ஒன்றாகும்.

### முதல் விண்வெளித்தளம் - ஸ்காட்லாந்து தளம்

- ராக்கெட்டுகளை செங்குத்தாக செலுத்துவதற்கும் செயற்கைக் கோள்களை அதன் சுற்றுவட்டப்பாதையில் நிறுத்துவதற்குமான முதல் விண்வெளித் தளத்திற்காக ஐக்கிய இராஜ்ஜிய (UK) விண்வெளி நிறுவனம், ஸ்காட்லாந்தின் வடக்குக் கடற்கலையின் ஏமொய்ன் தீபகற்பத்தில் உள்ள சதர்லாந்து தளத்தினை தேர்வு செய்துள்ளது.
- ஸ்காட்லாந்து தீபகற்பத்தின் முனையிலிருந்து ஆர்க்டிக் வட்டத்திற்கு மேல் வரை ராக்கெட்டுகள் நேரடிப் பாதையினை தேர்ந்தெடுக்க முடியும்.

## பொருளாதாரச் செய்திகள்

### பிரோஷ் ஜீஜீபோய் கோபுரங்கள் டிரேடுமார்க் முத்திரை

- மஹாராஷ்டிராவின் மும்பையில் உள்ள தலால் தெருவில் அமைந்துள்ள மும்பை பங்குச் சந்தையின் கட்டிடமான பிரோஷ் ஜீஜீபோய் கோபுரங்கள், டிரேடு மார்க் சட்டம், 1999-ன் கீழ் அதன் சிறப்பான கட்டிட அமைப்பிற்காக டிரேடுமார்க் முத்திரையினைப் பெற்றுள்ளது.
- இதனுடன் உலகில் டிரேடுமார்க் உரிமையைப் பெற்ற புகழ்பெற்ற கட்டிடங்களின் சிறப்புப் பட்டியலில் பிரோஷ் ஜீஜீபோய் இணைந்துள்ளது.
- மும்பையின் தாஜ்மஹால் தங்கும் விடுதியே டிரேடு மார்க் சட்டம், 1999 - ன் கீழ் ஜூன் 2017-ல் டிரேடுமார்க் முத்திரையினை இந்தியாவிலேயே முதல் முறையாக பெற்ற கட்டிடம் ஆகும்.
- உலகில் டிரேடுமார்க் முத்திரையினைப் பெற்ற மற்ற கட்டிடங்கள்
    - அமெரிக்காவின் நியூயார்க்கிலுள்ள எம்பயர் ஸ்டேட் கட்டிடம்
    - பிரான்சின் பாரிசில் உள்ள ஈபிள் கோபுரம்
    - ஆஸ்திரேலியாவின் சிட்னியிலுள்ள ஒப்ரா ஹவுஸ் மற்றும் பல.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

### ஸ்வீடன் நிறுவனம் சாப் உடனான BEL-ன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of understanding - MoU)

- L - அலை முப்பரிமாண வான்வெளி கண்காணிப்பு ரேடாரினை (RAWL-03) சாப் நிறுவனத்துடன் இணைந்து கூட்டாக விற்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அரசுக்கு சொந்தமான பாதுகாப்பு மின்னணு நிறுவனமான பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் (BEL - Bharat Electronics ltd) கையெழுத்திட்டுள்ளது.
- வான்வெளி கண்காணிப்பு ரேடார் RAWL-03 என்பது நிறுவனங்களால் இணைந்து

உருவாக்கப்பட்டதாகும்.

- RAWL-03 வான் மற்றும் மேற்பரப்பு இலக்குகளை முன்கூட்டியே கண்டறிதலுக்கான மற்றும் கண்காணிப்பதற்கான நீண்ட வரம்பெல்லையைக் கொண்ட வான்வெளி கண்காணிப்பு ரேடார் ஆகும்.
- கடல் மற்றும் நிலம் சார்ந்த கட்டமைப்புகளிலும் இதனைப் பொருத்த முடியும். இந்த அமைப்பு GaN TR தொகுதி தொழில்நுட்ப கலையின் அடிப்படையில் அமைந்ததாகும்.
- BEL என்பது அரசுக்கு சொந்தமான முன்னணி பாதுகாப்பு மின்னணு நிறுவனம் ஆகும். இது இந்தியாவின் மத்திய பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் உள்ள 9 பொதுத்துறை நிறுவனங்களில் ஒன்றாகும்.
- இது நவரத்தின தகுதிநிலையினைப் பெற்றுள்ளது. இதன் தலைமையிடம் கர்நாடகாவிலுள்ள பெங்களூருவில் அமைந்துள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## அமெரிக்காவின் சுயமுயற்சியால் உயர்ந்த பணக்காரப் பெண்

- சுயமுயற்சியால் உயர்ந்த அமெரிக்காவின் பணக்கார பெண்களின் வருடாந்திர தரவரிசைப் பட்டியலை போர்ப்ஸ் வெளியிட்டுள்ளது.
- இப்பட்டியல், அமெரிக்காவில் பரம்பரை சொத்துகளின் உதவியில்லாமல் தங்களது வாய்ப்புகளைத் தானே உருவாக்கிக் கொண்ட முதல் 60 பெண்களின் செல்வத்தினை கணக்கிடுகிறது.
- இந்த வருடத்திற்கான பட்டியலைத் தயார் செய்வதற்கு தேவையான குறைந்தபட்ச மொத்த சொத்து மதிப்பு 320 மில்லியன் அமெரிக்க டாலர்களாகும். கடந்த வருடம் இது 260 மில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது.
- நாட்டின் மிகப்பெரிய கூரை விநியோக நிறுவனமான ABC Supply-ன் இணை நிறுவனர் மற்றும் தலைவரான டியானே ஹென்டிரிக்ஸ் 4.9 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மொத்த சொத்து மதிப்புடன் முதலாவது இடத்தினை திரும்ப அடைந்துள்ளார்.
- மரியன் இலிட்ச் 4.3 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மொத்த சொத்து மதிப்புடன் இரண்டாவது இடத்தில் உள்ளார்.
- 900 மில்லியன் அமெரிக்க டாலர்கள் மொத்த சொத்து மதிப்பினைக் கொண்டு 20 வயதான கயிலி ஜென்னர் சுயமுயற்சியால் உயர்ந்த அமெரிக்காவின் பணக்கார பெண்களில் மிக இளவயது உடையவராவார் .
- இப்பட்டியலில் இடம்பெற்ற இரண்டு இந்திய வழிப் பெண்மணிகள்
    - அரிஸ்தா நெட்வொர்க்கஸ் கணினி வலையமைப்பு நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ஜெய ஸ்ரீ உலால் (1.3 பில்லியன் அமெரிக்க டாலர்கள் சொத்து மதிப்புடன் 18 வது இடத்தில் உள்ளார்)
    - IT ஆலோசனை நிறுவனம் சின்டெல்லின் இணைநிறுவனர் நீரஜ் சேத்தி (1 பில்லியன் அமெரிக்க டாலர்கள் சொத்து மதிப்புடன் 21 வது இடத்தில் உள்ளார்).
- இப்பட்டியலில் உள்ள 60 பெண்களின் மொத்த உச்சநிலை சொத்து மதிப்பு 71 பில்லியன் அமெரிக்க டாலர்கள் ஆகும்.

# விளையாட்டுச் செய்திகள்

## 2018-ன் விம்பிள்டன் சாம்பியன்ஷிப் வெற்றியாளர்கள்

- ஐக்கிய இராஜ்ஜியத்தின் லண்டனின் விம்பிள்டனில் அமைந்துள்ள அனைத்து இங்கிலாந்து புல்வெளி டென்னிஸ் மற்றும் குரோகுட் குழு மைதானத்தில் விம்பிள்டன் சாம்பியன்ஷிப் 2018 போட்டி நடைபெற்றது.
- இது சாம்பியன்ஷிப்பின் 132 வது பதிப்பு மற்றும் ஓபன் சகாப்தத்தின் 51 வது பதிப்பு ஆகும்.
- அமெரிக்காவின் மைக் ப்ரயான் மற்றும் ஜாக் சாக் ஜோடி ரவீன் க்லாசன் (தென் அமெரிக்கா) மற்றும் மைக்கேல் வீனஸ் (நியசிலாந்து) ஜோடியினைத் தோற்கடித்து ஆண்களுக்கான இரட்டையர் பிரிவினை வென்றுள்ளது.
- செக் குடியரசின் பார்போரா க்ரெஜ்சிகோவா மற்றும் கட்ரீனா சினைகோவா ஜோடி, க்வேதா பெஸ்ச்கே, (செக் குடியரசு) மற்றும் நிக்கோல மெரிச்சர் (அமெரிக்கா) ஜோடியினை தோற்கடித்து பெண்களுக்கான இரட்டையர் பிரிவினை வென்றுள்ளது.
- அலெக்சாண்டர் பேயா (ஆஸ்திரியா) மற்றும் நிக்கோல் மெலிச்சர் (அமெரிக்கா) ஜோடி, ஜமீ முரே (UK) மற்றும் விக்டோரியா அசரென்கா (பெலாரஸ்) ஜோடியினை தோற்கடித்து கலப்புப் பிரிவினை வென்றுள்ளது.

## ஆசிய கோப்பை - வில்வித்தை

- தைய்வானின் தைபேயில் நடைபெற்ற ஆசிய கோப்பை உலக வில்வித்தை தரவரிசைப் போட்டியின் மூன்றாம் நிலையில் இந்தியா 4 பதக்கங்களை பெற்றுள்ளது.
- இவ்வெற்றி 3 வெள்ளி மற்றும் ஒரு வெண்கல பதக்கத்தினை உள்ளடக்கியது.
- சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா ஈரான் உடன் சேர்ந்து மூன்றாவது முறையாக வென்றுள்ளது.
- முதலிடத்தில் உள்ள கொரியா மற்றும் போட்டியை நடத்தும் சீன தைபே ஆகியவற்றிற்கு அடுத்த இடத்தைப் பிடித்து இந்தியா போட்டியை நிறைவு செய்துள்ளது.
- கொரியா 8 தங்கப்பதக்கங்களுடன் 14 பதக்கங்களை வென்று முதலிடத்தில் உள்ளது. தைபே இரண்டு தங்கப் பதக்கங்களுடன் 5 பதக்கங்களை வென்றுள்ளது.

## ஹிமா தாஸ்

- பின்லாந்தின் தாம்பியரில் நடைபெற்ற IAAF உலக U-20 சாம்பியன்ஷிப் போட்டியில் பெண்களுக்கான 400 மீட்டர் போட்டியில் பங்கேற்று IAAF (International Association of Athletics Federations) உலக சாம்பியன்ஷிப்பில் தடகளம் சார்ந்த தங்கப் பதக்கத்தினை வென்ற இந்தியாவின் முதல் பெண்மணி என்ற வரலாற்றை ஹிமா தாஸ் படைத்துள்ளார்.
- அசாமை சேர்ந்த 18 வயதான இவர் 51.46 நொடிகள் என்ற கால அளவில் ரோமானியாவின் ஆன்டிரியா மில்கோஸ் (வெள்ளி) மற்றும் அமெரிக்காவின் டெய்லர் மேன்சன் (வெண்கலம்) ஆகியவர்களை வெளியேற்றி வெற்றி பெற்றுள்ளார்.

# முக்கிய தினங்கள்

## நபார்டு பவுண்டேசன் தினம் - ஜூலை 12

- வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டிற்கான தேசிய வங்கி (NABARD - National Bank for Agriculture and Rural Development) தேசத்திற்கான 36 வருட சேவையினை நிறைவு செய்துள்ளது. மேலும் 37வது பவுண்டேஷன் தினத்தினை ஜூலை 12 அன்று கொண்டாடியது.
- ‘கூட்டுப்பண்ணை மற்றும் சந்தை தொடர்புகள் : விவசாயி உற்பத்தியாளர்கள் அமைப்பு’ என்ற தலைப்பிலான தேசிய கருத்தரங்கு மும்பையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

- - - - - - - - - - - - - - -